*1*

# பாரம்பரியங்களும் வழக்கங்களும்

*"சகோதரரே, நீங்கள் எல்லாவற்றிலும் என்னை நினைத்துக் கொண்டு, நான் உங்களுக்கு ஒப்புவித்தபடி நீங்கள் கட்டளைகளைக் கைக்கொண்டு வருகிறதினிமித்தம் உங்களைப் புகழுகிறேன்" (1 கொரிந்தியர் 11:2).*

எந்த ஒரு தலைப்பின்மீதும் வேதாகம ரீதியான முடிவைப் பெற்றுக்கொள்வதற்கு நாம், மொழியின் அடிப்படைகளை, வார்த்தைகளின் அர்த்தத்தை, இலக்கணத்தின் முறையான பயன்பாட்டை, மற்றும் சந்தர்ப்பப்பொருளின் குறிப்பைப் புரிந்துகொள்ள வேண்டும். இவைகள் சிந்தனைகளையும் கருத்துக்களையும் பிறருக்குக் கொண்டு செல்லக்கூடிய கருவிகளாக இருக்கின்றன. பவுல் பின்வருமாறு எழுதினார்,

> மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான். நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்குத் தேவனிடத்திலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம். அவைகள் நாங்கள் மனுஷ ஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்தஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம் (1 கொரிந்தியர் 2:11-13).

இவ்வசனங்களில் அடங்கியுள்ள முக்கியமான இரண்டு கொள்கைகள், கிறிஸ்தவப்பெண் பற்றிய நம் படிப்பிற்குப் பொருத்தமானவைகளாக உள்ளன. முதலாவது, நாம் தேவனுடைய சிந்தையை "அறியும்" படிக்கு அவர், ஆவியானவரால் தமது சிந்தனைகளை, ஏவுதல் பெற்ற மனிதர்கள் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். 1 கொரிந்தியர் 2:12ல் "அறிவு" என்பதற்கான கிரேக்கவார்த்தையாக இருப்பது, அனுபவத்தின்மூலம் பெறப்படுகிற அறிவை அல்லது பகுத்தறிவின் அடிப்படையில் முடிவொன்றை அடைதலை அர்த்தப்படுத்துகிற *ginosko* என்பது அல்ல. அது, காணுதல் அல்லது புரிந்துகொள்ளுதல் என்று அர்த்தப்படுகிறதான

*eidomen* என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து வருவதாக உள்ளது. இரண்டாவது, தேவன் தமது சிந்தனைகளை அல்லது செய்தியை வெளிப்படுத்துவதற்கு "வார்த்தைகளை" (1 கொரிந்தியர் 2:13), *logois* களைப் பயன்படுத்தியுள்ளார். நாம் இந்தச் செய்தியை அல்லது தேவனுடைய சிந்தையை, மனிதப்பகுத்தறிவு அல்லது கண்டுபிடித்தல் என்பதைக் கொண்டு மட்டும் புரிந்துகொண்டுவிட முடியாது, ஆனால் அவர் தம்மை வெளிப்படுத்தப் பயன்படுத்தியுள்ள வாகனங்களான "வார்த்தைகளின்" அர்த்தங்களைச் சார்ந்தவர்களாய் இருக்க வேண்டும்.

தேவன் தமது சிந்தனைகளை, "வார்த்தைகளின்" மூலம் நமக்கு வெளிப்படுத்தியுள்ளார் என்ற உண்மையின் அடிப்படையில், அவர் வெளிப்படுத்தியுள்ள சத்தியங்களை நாம் "அறிவதற்கு" அவரது "வார்த்தைகளின்" அர்த்தங்களைப் புரிந்துகொள்ள வேண்டும். இந்தக்காரணத்தினால், பெண்கள் குறித்துத் தேவனுடைய வடிவமைப்பை/மாதிரியைப் புரிந்துகொள்வதற்காக நமது படிப்பில் சிலவேளைகளில் தேவனுடைய சித்தத்தைப் புரிந்துகொள்வது அவசியமாய் இருக்கும்.

## பாரம்பரியமும் பாலினப் பணிகளும்

தேவனுடைய திட்டத்தில் பெண்கள் பெற்றுள்ள இடம் பற்றிக் கலந்துரையாடுபவர்கள், "பாரம்பரியம்" மற்றும் "பாரம்பரியமான பழக்க வழக்கங்கள்" என்ற வார்த்தைகளை அடிக்கடி குறிப்பிடுகின்றனர். "பாரம்பரியம்" மற்றும் "பாரம்பரியமான" என்ற இந்தச் சொற்றொடர்கள், ஒரு தலைமுறையில் இருந்து மறுதலைமுறைக்கு கையளிக்கப்பட்டுள்ள கட்டுப்படுத்தாத நடைமுறைகளை அர்த்தப்படுத்தப் பயன்படுகின்றன. சமூகத்திலுள்ள குழுக்கள் சிலவேளைகளில் இந்தப் பாரம்பரியங்களைப் பிறர்மீது கட்டுப்படுத்த நாடுகின்றனர்.

வேதாகமக் கருத்துநோக்கில் இருந்து பார்க்கையில், ஒரு "பாரம்பரியம்" என்பது தன்னிலே நல்லதாகவோ அல்லது மோசமானதாகவோ இருப்பதில்லை மற்றும் அது ஒரு "பாரம்பரியமா" அல்லவா என்று கருதப்படுவதைப் பார்க்கிலும் அதிகமாக முடிவுசெய்யப்பட வேண்டியதாக உள்ளது. வேதாகமத்தில் "பாரம்பரியம்" என்ற வார்த்தையானது (Gk.: *paradosis*) "பின்வருபவர்களுக்குக் கையளிக்கப்பட்ட" என்ற கருத்தை உள்ளடக்கியிருக்கிறது. கேட்க வேண்டிய முதல் கேள்வியாவது: "இதைக் கையளித்தது யார்?" இது தேவனிடத்தில் இருந்து வந்ததா அல்லது மனிதரிடத்தில் இருந்து வந்ததா? கேட்க வேண்டிய இரண்டாவது கேள்வியாவது "இந்தப்பகுதியைத் தேவன் சட்டப் பூர்வமாக்கியுள்ளாரா?" தேவன் சட்டப்பூர்வமாக்கியிராத விஷயங்களில் பாரம்பரியங்கள் அவரைப் பொறுத்தமட்டில் நடுநிலையாய் உள்ளன. நாடுகள், குடும்பங்கள், சமூகங்கள், பள்ளிகள், கர்த்தருடைய சபையின் சபைக்குழுமங்கள் மற்றும் பிற குழுக்கள் ஆகியவை, தேவனுடைய வசனத்தைப் புறம்பாக்காத வகையில் பாரம்பரியங்களைக் கொண்டிருக்க முடியும்.

தேவனிடத்தில் இருந்து வந்துள்ள எந்த ஒரு *paradosis*ம் - "பாரம்பரியமும்" அல்லது "ஆணையும்" - வேதாகமத்தின் ஏவுதல் பெற்ற

*எழுத்தாளர்களால் வெளிப்படுத்தப்பட்டது, மற்றும் அது முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டது, இன்றைய நாட்களிலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியதாக உள்ளது (1 கொரிந்தியர் 11:2; 2 தெசலோனிக்கேயர் 2:15; 3:6). இந்தப் பாரம்பரியங்களைப் பற்றி எவரொருவரும் இலகுவாகப் பேசக்கூடாது. இருப்பினும், தேவனுடைய கட்டளையை மீறுவதாக உள்ளதான, மனிதரால் அறிமுகப்படுத்தப்பட்ட எந்தப் பாரம்பரியமும் நடைமுறைப்படுத்தப்படக்கூடாது (மத்தேயு 15:3-9; மாற்கு 7:6-13; கொலோசெயர் 2:8).*

*ஒரு பாரம்பரியம் பின்வரும் சோதனைகளைக் கொண்டு மதிப்பிடப்பட வேண்டும்: (1) இந்தப் பாரம்பரியம் இயேசுவினிடமிருந்து கையளிக்கப்பட்டுள்ளதா? ஆம் என்றால், அதை நாம் பின்பற்ற வேண்டும் (மத்தேயு 28:20). (2) இந்த நடைமுறை தேவனால் கண்டனம் பண்ணப்பட்டுள்ளதா? (உதாரணமாக, 1 யோவான் 5:21ஐக் காணவும்.) ஆம் என்றால், அது மறுக்கப்பட வேண்டும். (3) நடைமுறையின் வட்டாரத்தில் தேவன் [நாம்] தெரிவு செய்து கொள்ளும்படியான கூற்றைக் கூறியுள்ளாரா? ஆம் என்றால், நாம் அவரது தெரிவுகளினால் கட்டுப்படுத்தப்படுகின்றோம். (எபிரெயர் 7:12-14ஐக் காணவும்.) தேவனுடைய தெரிவுகள் கட்டுப்படுத்தப்படுபவைகளாய் இராவிட்டால், அவரது வசனம் அர்த்தமற்றதாக இருக்கும். வேதாகமத்தில் முன்னோடி நிகழ்ச்சியொன்று காணப்படும்போதெல்லாம், அது (நம்மைக்) கட்டுப்படுத்துவதாகக் கருதப்படவேண்டும் மற்றும் அது மனிதப்பாரம்பரியங்களுக்கு மேலாக மதிக்கப்பட வேண்டும். (4) ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தைப் பற்றித் தேவன் தெரிவு எதையும் ஏற்படுத்தியிருப்பதில்லை என்றால், அந்த வட்டாரத்தில் எழுகிற பாரம்பரியங்களை ஏற்றுக்கொள்ளவோ அல்லது மறுக்கவோ நாம் உரிமை கொண்டுள்ளோம். (ரோமர் 14:2, 3ஐக் காணவும்.)*

## ஆண்கள் மற்றும் பெண்களின் பணிப்பெறுப்புகள்

*நமது சமூகத்திற்குள்ளாக, ஆண்களும் பெண்களும் காலத்திற்குக் காலமும் இடத்திற்கு இடமும் மாறுபடக்கூடிய பாரம்பரியமான பணிப்பொறுப்புகளைக் கொண்டுள்ளனர். இதற்கு மறுபுறத்தில், குறிப்பிட்ட சில பணிப்பொறுப்புகள், ஆண்கள் மற்றும் பெண்களின் உடல்ரீதியான மற்றும் உணர்வுரீதியான விஷயங்களின் அடிப்படையில் அமைந்திருப்பதால் அவைகள் ஒருக்காலும் மாறாமல் இருக்கலாம். ஆண்களும் பெண்களும் பலவகையில் ஒன்றுபோலவே இருக்கின்றனர், ஆனால் பிறவகைகளில் அவர்கள் மாறுபட்டிருக்கின்றனர். அவர்களைத் தேவன் அவ்வாறுதான் படைத்துள்ளார். அவர் சிருஷ்டிகராய் இருப்பதால், அவர்களின் பணிப்பொறுப்புகளுக்கும், அவர்கள் ஒருவருக்கொருவர் கொண்டுள்ள உறவுமுறைக்கும் மிகச்சிறந்த ஏற்பாட்டை அவர் மாத்திரம் அறிகின்றார்.*

*ஆண்களும் பெண்களும் வேறுபட்டவர்களாய் இருந்தாலும், அவர்கள் தனிப்பட்ட பொறுப்புகளைக் கொண்டிருந்தாலும், இது*

அவர்களின் தகுதி/மதிப்பு பற்றிய தேவனுடைய எண்ணப்போக்கை எவ்வகையிலும் பாதிப்பதில்லை. அவரது பார்வையில் அவர்கள் சமமான மதிப்புடையவர்களாகவே இருக்கின்றனர். தேவன், ஆண்களுடைய மற்றும் பெண்களுடைய இயல்புகளின் அடிப்படையில், அவர்களின் வாழ்வில் மாறுபட்ட பணிப்பொறுப்புகளைக் கொடுத்துள்ளார்.

## பாரம்பரியங்களும் வழக்கங்களும்

பாரம்பரியங்களும் வழக்கங்களும் பொதுவாக ஒரே வகைப்பாடுகளில் அடங்குகின்றன. இந்தச் சொற்றொடர்கள் ஒரேவகையான அர்த்தம் கொண்டுள்ளன: "வழக்கம்" என்பது "ஒரு குறிப்பிட்ட குழுவில் அல்லது பகுதியிலுள்ள மக்களால் பின்பற்றப்படும் ஒரு நடைமுறை"[1] என்று விவரிக்கப்படுகிறது, மற்றும் "பாரம்பரியம்" என்பது "ஒரு தலைமுறையில் இருந்து அடுத்த தலைமுறைக்கு, (விசேஷமாக) வாய்மொழியாகக் கையளிக்கப்படும் ஒரு கலாச்சாரமாக" உள்ளது.[2] வழக்கம் என்பது, ஒரு கலாச்சாரத்தை அல்லது ஒரு சமூகத்தைச் சேர்ந்த யாவராலும், சிலவற்றைச் செய்வதற்குப் பொதுவாகப் பயன்படுத்தப்பட்ட நடைமுறை அல்லது செயல்முறையை உள்ளடக்கியிருக்கலாம். பாரம்பரியம் என்பது ஒரு தலைமுறையில் இருந்து அடுத்த தலைமுறைக்குக் கையளிக்கப்பட்டதால் அது ஒரு சமூகத்தினுடைய குறிப்பிட்ட கூறுகளுக்குள் மதிக்கப்பட்டுள்ள நடைமுறையாய் இருக்கலாம்.

வழக்கங்களைப் பற்றிய வேதாகமரீதியான கண்ணோக்கானது பின்வரும் கொள்கைகளுக்குள் அடங்குவதாக உள்ளது:

(1) சில வழக்கங்கள் சமூகத்தினால் கட்டுப்படுத்தப்பட்ட நிறுவனங்களாய் இருப்பதால், கிறிஸ்தவர்களால் பின்பற்றப்பட வேண்டியவைகளாக உள்ளன. 1 பேதுரு 2:13, 14ன் அர்த்தத்தை NASB வேதாகமம் நன்கு உணர்த்தக்கூடும்: "நீங்கள் மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும் கர்த்தர் நிமித்தம் கீழ்ப்படியுங்கள், மேலான அதிகாரமுள்ள இராஜாவுக்கானாலுஞ்சரி, தீமைசெய்கிறவர்களுக்கு ஆக்கினையும் நன்மை செய்கிறவர்களுக்குப் புகழ்ச்சியும் உண்டாகும்படி அவனால் அனுப்பப் பட்ட அதிகாரிகளுக்கானாலுஞ்சரி, கீழ்ப்படியுங்கள்." ஒரு கிறிஸ்தவர், மனித "ஸ்தாபனங்கள்" (Gk.: *ktisis*; நேரடியான அர்த்தத்தில், "படைப்பு") யாவற்றிற்கும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும். இது தேவனுடைய ஆணையை மீறாதிருக்கும் வரையில் மனிதரால் நிறுவப்பட்ட சட்டங்கள் மற்றும் வழக்கங்களை உள்ளடக்கும். (நடபடிகள் 5:29ஐக் காணவும்.)

(2) சில வழக்கங்கள், கிறிஸ்தவர்கள் வாழ்கின்ற கலாச்சாரத்திற்கு இணங்க நடைமுறைப்படுத்தப்பட வேண்டியவைகளாய் இருக்கின்றன. அவ்வாறு செய்தலானது, இன்னொரு கலாச்சாரத்தில் பயனுள்ளதாக இராவிட்டாலும், அந்த சமூகத்தில் இழந்துபோகப்பட்டிருப்பவர்களுக்குப் போதிக்க அவர்களின் வாய்ப்பை மேம்படுத்தக்கூடும். பவுல் புறஜாதியாரின் மத்தியில் இருந்தபோது, அவர் ஒரு புறஜாதியார் போலவே வாழ்ந்தார்; அவர் யூதர்களின் மத்தியில் வாழ்ந்தபோது, அவர் யூத வழக்கங்களைப் பின்பற்றினார் (1 கொரிந்தியர் 9:20). அவர் எந்த வழக்கத்தைப்

பின்பற்றினாலும், கிறிஸ்துவின் போதனைகளை மீறும் செயல் எதையும் அவர் செய்யாதிருந்தார் (1 கொரிந்தியர் 9:21).

பவுல், தீமோத்தேயுக்கு விருத்தசேதனம் செய்விக்கத் தெரிந்து கொண்டது மற்றும் தீத்துவுக்கு விருத்தசேதனம் செய்விக்க மறுக்கும்படி தெரிந்து கொண்டது ஆகியவற்றில் அவரது நடைமுறை விரிவாக விவரிக்கப்படுகிறது. தீமோத்தேயு கிரேக்கத் தகப்பனையும் யூதத்தாயையும் கொண்டிருந்தார் என்று அறிந்திருந்த யூதர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதில் ஏற்படக்கூடிய தடையெதையும் தவிர்ப்பதற்காக, அவர் தீமோத்தேயுக்கு விருத்தசேதனம் செய்வித்தார் (நடபடிகள் 16:3). இருப்பினும், யூத முன்னோர்களைக் கொண்டிராத தீத்துவுக்கு விருத்தசேதனம் செய்விக்கும்படி சபையை அனுமதிக்க அவர் மறுத்தார். தீத்துவின் சுயாதீனத்தில் ஆக்கிரமிப்புச் செய்ய சபைக்கு உரிமையில் லாதிருந்தது (கலாத்தியர் 2:3-5). பவுல், விருத்தசேதனம் செய்துகொள்ளாத ஒரு துணையாளுடன் பயணம் செய்திருந்ததாகக் கேள்விப்பட்டால், அவரது போதனையைக் கவனித்திருக்கமாட்டாத யூதர்களுக்குப் பிரசங்கம் செய்வதற்கு, தீமோத்தேயுவினுடைய விருத்தசேதனம் ஒரு வாய்ப்பை அளித்தது. இதற்கு மறுபுறத்தில், தீத்துவுக்கு விருத்தசேதனம் செய்விக்க அனுமதித்தலானது, யூத வழக்கங்களும் நியாயப்பிரமாணங்களும் புறஜாதிக்கிறிஸ்தவர்களைக் கட்டுப்படுத்தும் என்ற தவறான மறைகருத்தை சபைக்கு அனுப்புவதாய் இருந்திருக்கும்.

(3) தேவனால் தடை செய்யப்பட்ட வழக்கங்களில் கிறிஸ்தவர்கள் ஈடுபடக்கூடாது. புறஜாதியாருடைய சில வழக்கங்களைப் பவுல் பின்பற்றியிருந்தாலும், அவரும் மற்ற கிறிஸ்தவர்களும், மோசம்போக்கும் வாழ்வுக்கான அவர்களின் (புறஜாதியாரின்) வழக்கங்களைப் பின்பற்ற அனுமதிக் கப்படவில்லை. பேதுரு, “சென்ற வாழ்நாட் காலத்திலே நாம் புறஜாதியாருடைய இஷ்டத்தின்படி நடந்துகொண்டது போதும்; அப்பொழுது நாம் காமவிகாரத்தையும் துர் இச்சைகளையும் நடப்பித்து, மதுபானம் பண்ணி, களியாட்டுச்செய்து, வெறிகொண்டு, அருவருப்பான விக்கிரகாராதனையைச் செய்துவந்தோம்” என்று எழுதினார் (1 பேதுரு 4:3). தேவனுடைய கட்டுப்பாடுகளை மீறுகின்ற வழக்கங்கள் கிறிஸ்தவருக்குத் தடைசெய்யப்பட்டுள்ளன.

(4) சில வழக்கங்கள் நடுநிலையானவையாக இருக்கலாம். இந்தப்பகுதியில் கிறிஸ்தவர் ஒருவர் செய்கின்றவை அவரது அல்லது அவளது சுயமுன்னுரிமை சார்ந்த விஷயமாகவே உள்ளது. சமூகத்தில் வழக்கமாக உண்ணப்படும் பல்வகை உணவுகளை உண்ணுவதையோ அல்லது உண்ணாதிருப்பதையோ தேர்ந்துகொள்ளுதல் கிறிஸ்தவர்களின் உரிமையாய் இருக்கிறது: “புசிக்கிறவன் புசியாதிருக்கிறவனை அற்பமாயெண்ணாதிருப்பானாக; புசியாதிருக்கிறவனும் புசிக்கிறவனைக் குற்றவாளியாகத் தீர்க்காதிருப்பானாக; தேவன் அவனை ஏற்றுக் கொண்டாரே” (ரோமர் 14:3). கிறிஸ்தவர்கள், தங்களது தேர்ந்து கொள்ளுதலினால் கிறிஸ்துவின் காரியம் பாதிக்கப்படாதிருக்குமானால், ஒரு நெறிமுறையைப் பின்பற்றத்தேர்ந்துகொள்வதற்கோ அல்லது அதைப்

*பின்பற்றாதிருக்கத் தேர்ந்துகொள்வதற்கோ உரிமை கொண்டுள்ளனர்.*

*(5) கிறிஸ்தவர்கள் பலன்தரும் வழக்கங்களை நிலைநாட்டலாம், ஆனால் அவை கட்டுப்படுத்துபவையாக இருப்பதில்லை. இயேசுவும் பவுலும் ஆகிய இருவருமே, வழக்கமாகப் போதிப்பதற்கென்று ஜெப ஆலயத்திற்குச் சென்றிருந்தனர் (லூக்கா 4:16; நடபடிகள் 17:2). இது அவர்களுக்கு நடைமுறைப்படுத்துவதற்கான ஒரு நல்ல வழக்கமாய் இருந்தது, ஆனால் இப்படிப்பட்ட வழக்கங்கள் கிறிஸ்தவர்களைக் கட்டுப்படுத்துவதில்லை.*

*(6) சில சமூகங்கள், கிறிஸ்தவர்கள் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தேவன் கட்டளையிட்டுள்ள சில வழக்கங்களைக் கொண்டுள்ளன. இவைகள் சமூகத்தில் உள்ள வழக்கங்கள் என்பதால் அல்ல, ஆனால் இவைகள் தேவனால் கட்டளையிடப்பட்டுள்ளதால், கிறிஸ்தவர்களைக் கட்டுப்படுத்துபவையாக உள்ளன. கிறிஸ்தவ சமூகத்தைக் கட்டுப்படுத்துபவையாக ஒரு கலாச்சாரத்தில் உள்ள வழக்கங்களுக்குப் பின்வருபவை உதாரணங்களாக உள்ளது.*

*அ. யூதர்கள் மூப்பர்களைத் தங்களின் நடத்துனர்களாகக் கொண்டிருப்பது வழக்கமாய் இருந்தது (மத்தேயு 15:2; 16:21; லூக்கா 22:66; நடபடிகள் 4:5). சபைகளிலும் மூப்பர்கள் நியமிக்கப்பட்டனர் (நடபடிகள் 14:23; தீத்து 1:5).*

*ஆ. யூதர்கள் ஒவ்வொரு வாரத்திலும் (ஆராதிக்க) கூடிவந்தனர் (நடபடிகள் 13:27; 15:21). கிறிஸ்தவர்களும் வாரந்தோறும் (ஆராதனை) கூட்டங்களைக் கொண்டிருந்தனர் (நடபடிகள் 20:7; 1 கொரிந்தியர் 16:2; எபிரெயர் 10:25).*

*இ. ஒரு வழக்கைத் தீர்த்து வைப்பதற்கு, யூதர்களுக்கு இரண்டு சாட்சிகள் தேவையாயிருந்தது (உபாகமம் 17:6; மத்தேயு 26:60). ஒரு குற்றச்சாட்டைச் சரிபார்ப்பதற்கோ அல்லது ஆதரிப்பதற்கோ, கிறிஸ்தவர்களுக்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சாட்சிகள் தேவை (2 கொரிந்தியர் 13:1; 1 தீமோத்தேயு 5:19).*

*ஈ. திருமணம் செய்துகொள்ளுதல் என்பது யூதர்களுக்கும் புறஜாதியாருக்கும் வழக்கமாயிருந்தது. திருமணம் செய்துகொண்ட ஆணும் பெண்ணும் மாத்திரம் ஒன்றுகூடி வாழ்வதையே தேவன் எதிர்பார்க்கின்றார் (ரோமர் 7:2, 3; 1 கொரிந்தியர் 7:2, 9).*

*உ. யூதர்கள், சுத்திகரிக்கும் நோக்கங்களுக்காக, சடங்காச்சாரமான முழுகுதல்களையும் கழுவுதல்களையும் நடைமுறையில் கொண்டிருந்தனர் (மாற்கு 7:3, 4). இயேசுவின் இரத்தத்தினால் சுத்திகரிப்பைப் பெறுவதற்குத் தேவன் தண்ணீரில் அடக்கம்பண்ணப்படுதலைக் கேட்கின்றார் (மாற்கு 16:16; நடபடிகள் 2:38; 22:16; கொலோசெயர் 2:12, 13; எபேசியர் 5:26).*

*சில விஷயங்கள் சமூகத்தில் வழக்கமாய் இருக்கின்றன என்று நிரூபித்தலானது அது தேவனால் கேட்டுக்கொள்ளப்படுகிறது என்று ஆக்குவதில்லை. திருமணத்தின் கட்டுப்படுத்தும் இயல்பு, பாவத்தில் இருந்து சுத்திகரிக்கப்படுவதற்காக முழுக்காட்டப்படுதல், கணவர்/ மனைவி உறவுமுறை, சபையில் பெண்களின் பணிப்பொறுப்பு மற்றும்*

தேவனால் கட்டளையிடப்பட்டுள்ள வேறு எந்த நடைமுறையாகவோ அல்லது சமுதாய வழக்கமாகவோகூட இருக்கின்றன என்ற உண்மை யானது அதைக் கிறிஸ்தவர்களின் மீது குறைவாகக் கட்டுப்படுத்தும்படி ஏற்படுத்துவதில்லை. ஒரு சமுதாயம் எதைச் செய்தாலும் அல்லது செய்யாதிருந்தாலும், தேவனுடைய கட்டளைகள் கட்டுப்படுத்துபவையாக உள்ளன. பவுல், "நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல் ..." என்று கூறியபோது (ரோமர் 12:2), சமூகத்தில் உள்ள பாவம் நிறைந்த நடைமுறைகளைத் தவிர்க்க வேண்டும் என்றே அவர் அர்த்தப்படுத்தினார்; தேவன் கட்டளையிட்டுள்ள சிலவற்றை, அவை ஒரு கலாச்சார நடைமுறையாய் இருப்பதால் செய்யாதுவிட்டுவிட வேண்டும் என்று அவர் அர்த்தப்படுத்தவில்லை. "ஒருபோதனையானது ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு கலாச்சார நடைமுறையாக உள்ளது என்பதால் மாத்திரம், கிறிஸ்தவர்கள் அதை நீக்கிப்போட இயலாது."[3]

பெண்ணின் பணிப்பொறுப்பை பற்றியும் அவளது பொறுப்புகளைப் பற்றியும் கையாளுவதில் வேதாகமம் கலாச்சாரத்திற்கு வேண்டுகோள் விடுப்பதில்லை. மாறாக, வேண்டுகோளானது, படைப்பில் தேவனுடைய திட்டமிட்ட முறைமைக்கும் தேவனுடைய பிரமாணத்திற்குமானதாக உள்ளது:

> புருஷன் ஸ்திரீயிலிருந்து தோன்றினவனல்ல, ஸ்திரீயே புருஷனிலிருந்து தோன்றினவள். புருஷன் ஸ்திரீக்காகச் சிருஷ்டிக்கப்படவில்லை, ஸ்திரீயே புருஷனுக்காகச் சிருஷ்டிக்கப்பட்டாள் (1 கொரிந்தியர் 11:8, 9; 1 தீமோத்தேயு 2:13ஐயும் காணவும்).
>
> சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக்கடவர்கள்; பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை; அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும்; வேதமும் அப்படியே சொல்லுகிறது (1 கொரிந்தியர் 14:34).

வழக்கங்கள் என்பவை அவளது பணிப்பொறுப்பிற்கு எடுத்துரைக்கப்பட்ட அடிப்படையாயிருப்பது இல்லை.

நாம் ஒரு உதாரணத்தை ஆழ்ந்து சிந்திப்போம். சில மக்கள், "பரிசுத்த முத்தம்" என்பது ஒரு வழக்கமாக மாத்திரமே உள்ளது, அது (கிறிஸ்தவர்களை) கட்டுப்படுத்துவதில்லை என்று முடிவுசெய்துள்ளனர். இந்த உதாரணத்தின் அடிப்படையில் அவர்கள், தேவனுடைய மற்ற கட்டளைகளையும் கட்டுப்படுத்தாத வழக்கங்கள் என்று நீக்கிப்போட நாடுகின்றனர். "பரிசுத்த முத்தம்" பற்றிய கூற்றுக்களும் (ரோமர் 16:16; 1 கொரிந்தியர் 16:20; 2 கொரிந்தியர் 13:12; 1 தெசலோனிக்கேயர் 5:26) "அன்பின் முத்தமும்" (1 பேதுரு 5:14) வாழ்த்துதலின் முத்தம் கொடுக்கப்பட வேண்டிய வகையை முறைப்படுத்தின; முத்தம் என்பது இதில் கட்டளையாக இருக்கவில்லை. அந்த சமூகத்தில் இருந்த மக்கள் ஏற்கனவே அவ்வாறு ஒருவர் மற்றவரை வாழ்த்திக் கொண்டிருந்தனர் என்பதால், கிறிஸ்தவர்கள் ஒருவர் மற்றவரை முத்தம் கொடுத்து

வாழ்த்தவேண்டும் என்று பவுல் கட்டளையிட அவசியம் இல்லாதிருந்தது. அவர்கள் ஒருவருக்கொருவர் கொடுத்துக்கொள்ளும் முத்தத்தின் வகையை ஆளுமை செய்யும்படியே கட்டளை கொடுக்கப்பட்டது. அது ஒரு சிற்றின்ப உணர்வுக்குரிய, காமம்நிறைந்த முத்தமாய் இராமல், ஒரு "பரிசுத்த முத்தமாய்" அன்பின் முத்தமாய் இருக்க வேண்டியிருந்தது.

பெற்றோர் ஒருவர் தமது மகனிடத்தில், "பாதுகாப்பாக (வண்டியை) ஓட்டு" என்று கூறலாம். அதில், "ஓட்டுதல்" என்பதன்மீதல்ல, ஆனால் "பாதுகாப்பாக" என்பதின்மீதே வலியுறுத்தம் உள்ளது. அந்த இளைஞன் வண்டியை ஓட்டுவான் என்பதை, அவனது பெற்றோர் அறிந்துள்ள நிலையில் அவன் வண்டியை ஓட்டும்படி அவர்கள் கட்டளை கொடுப்ப தில்லை. "பாதுகாப்பாக" என்ற வார்த்தையின் மீதுள்ள வலியுறுத்தம், அவன் (வண்டியை) எவ்வாறு ஓட்டவேண்டும் என்று அவனுக்கு அறிவுறுத்துவதை நோக்கங்கொண்டுள்ளது. இதே விஷயம், பரிசுத்த முத்தத்திற்கும் உண்மையானதாக உள்ளது. "முத்தமிடுதல்" என்பதற்குக் கட்டளை தரப்பட வில்லை, ஆனால் சமூகத்தில் பொதுவாக நடைமுறையிலிருந்த முத்தத்தை முறைப்படுத்துவதற்கே கட்டளை தரப்பட்டது.

மற்ற சிலர், 1 கொரிந்தியர் 11:2-16ல் பெண்களின் முக்காடு பற்றிப் பவுலின் கலந்துரையாடலுக்குத் தங்கள் விளக்கத்தின் அடிப்படையில், தேவனுடைய கட்டளைகள் வழக்கங்களின் அடிப்படையிலேயே உள்ளன என்று கூறி அவற்றைத் தள்ளிவிட முயற்சி செய்துள்ளனர்.[4] இவ்வசனப்பகுதியானது, கிறிஸ்தவர்கள் வழக்கங்களைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று தேவன் கட்டளையிட்டுள்ளார் என்று நிரூபிப்பதில்லை. கிரேக்க மற்றும் ரோம உலகத்தில் இருந்த பெண்கள், அண்மைக்கிழக்கு நாடுகளில் இருந்த பெண்களைப்போலின்றி, வழக்கமாகத் தங்கள் முக்காடுகளை அணியாதிருந்தனர். ரிச்சர்டு ஆஸ்டர் என்பவர் பின்வரு மாறு கூறினார்,

> ஒரு கருத்துநோக்கில் இருந்து காணும்போது, வேதவசனங்களில் உள்ள ஒவ்வொரு விஷயமுமே கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கிறது. அது, பரிசுத்த முத்தமாகவோ, தண்ணீரில் முழுக்காட்டப் படுதலாகவோ, அல்லது சிலுவையில் அறையப்படுதலாகவோ, எதுவாயிருப்பினும் இந்த உபதேசங்களும் நடைமுறைகளும் பல்வேறு கலாச்சாரங்களிலும் அவற்றின் மூலமாகவும் மற்றும் பல்வேறு கலாச்சாரங்களின் மொழிகளிலும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. இப்படியிருக்க, வேதவசனங்களின் முக்கியமான சில உபசேதங்கள் "கலாச்சாரப் பரிமாணங்களைக் கொண்டிருப்பதால்," "கட்டுப்படுத்துதல்" அல்லது "நித்தியமானது" ஆகியவற்றிற்கு எதிராக "கலாச்சாரரீதியானது" என்ற குழியைப்பறித்தல் என்பது ஏற்புடையதாயிருப்பதில்லை. புதிய ஏற்பாட்டு வேதவசனங்களில் உள்ள எதுவும் நிரந்தரமானதல்ல என்று கூறுவதோ அல்லது புதிய ஏற்பாட்டு வேதவசனங்களில் உள்ள ஒவ்வொன்றும் நிரந்தரமானது என்று கூறுவதோ இதன் கருத்தல்ல. மாறாக, சத்தியத்திற்கும் கலாச்சாரத்திற்கும் இடையில் இருதலைப்பட்சமான நிலையில் அல்ல, ஆனால் புதிய ஏற்பாட்டில் இருந்து, இன்றைய நாட்களில்

நம்மைக் கட்டுப்படுத்துபவை எவை மற்றும் கட்டுப்படுத்தாதவை எவை என்பவற்றை வித்தியாசப்படுத்துதல் ஏற்புடையதாக இருக்கும் என்பதே எனது கருத்தாக இருக்கிறது. வேதாகம சத்தியம் யாவும் அதன் [வேதாகமத்தின்]கலாச்சாரப் பற்றுதலை உடுத்தி வருவதால், நவீன உலகில் இன்னும் கட்டுப்படுத்தும் வகையில் கலாச்சாரம் உள்ளதென்று நாம் அடையாளப்படுத்தலாம் என்று உணர்ந்தறியும் போது ஒருவர் இதைப் பற்றி நன்கு புரிந்து கொண்டிருப்பார் என்று காணப்படுகிறது.[5]

## பாரம்பரியமும் வெளிப்படுத்துதலும்

ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் இருக்கும்படி தேவன் நோக்கங்கொண்டுள்ள உறவு பற்றிய எந்த ஒரு ஆராய்வும் வெளிப்படுத்தப் பட்டவற்றுடன் தொடங்க வேண்டும். அனுபவம், வழக்கம், மற்றும் தர்க்கம் ஆகியவை சத்தியத்திற்குள் தடுமாறக்கூடும்; இருப்பினும், தேவனுடைய வெளிப்படுத்தப்பட்ட வசனத்தில் மாத்திரமே உறுதியான ஆதாரம் கண்டறியப்பட முடியும்.

நாம் இந்தப் படிப்பை, பெண் என்ற பாடக்கருத்துடன் தொடர்புடைய வேதவசனங்களை ஜாக்கிரதையாக ஆழ்ந்து சிந்திப்பதுடன் அணுகுவோம். நாம், யூகம், செல்லாத கற்பிதங்கள் மற்றும் முன் அனுமானிக்கப்பட்ட முடிவுகள் ஆகியவற்றைத் தவிர்ப்பதற்கு முயற்சி செய்வோம். இவற்றை முற்றிலுமாகத் தவிர்த்தல் என்பது மனிதத்துவத்தில் இருந்து வெளியேறி தெய்வீகத்தில் அடியெடுத்து வைப்பதாயிருக்கும்; இது சாத்தியமற்றதாயிருக்கையில், நாம் யாவருமே, உணர்வுகள் மற்றும் தவறான கருத்துக்கள் ஆகியவற்றால் பொதியப்பட்டுள்ள பாடக்கருத்து ஒன்றை அணுகும்போது, இயன்ற வரையில் உயர் குறிக்கோளுடையவர்களாய் இருக்கும்படி நாடவேண்டும். நாம் யாவருமே உண்மையாகப் பதில் அளிக்கும்படி நாட வேண்டிய கேள்வியாவது: “இந்தப் பாடக்கருத்தைப் பற்றித் தேவன் கூற விரும்புவது என்ன?” இதை நாம் நமது இலக்காகக் கொண்டால், நாம் சரியான முடிவை அடைந்தாக வேண்டும்.

கற்றறிந்த மற்றும் புலமைத்துவம் வாய்ந்த மக்கள் பலர் ஒப்புக்கொள்ளாதிருப்பதால் இந்தப் பாடக்கருத்தின் மீதான சத்தியத்தை நாம் ஆராய்வதற்குச் சாக்குப்போக்கை கூறக்கூடாது. இது நமது படிப்பில் நம்மை உற்சாகம் குன்றச் செய்ய நாம் அனுமதித்தால், நாம் எந்தப் பாடக்கருத்தின்மீதான சத்தியத்தையும் ஒருக்காலும் நாட இயலாது. ஏறக்குறைய நாம் ஆழ்ந்து சிந்திக்கும் ஒவ்வொரு தலைப்பும் கற்றறிந்த மக்களால் மாறுபட்ட கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டதாயிருக்கும். நாம் படிக்கையில், ஒருவர் பிறர்மீது அன்பைச் செயல்படுத்த வேண்டும், நாம், நமது முடிவுகளை இன்னொரு நபரின் மனச்சாட்சியில் கட்டுவிக்க நாடக்கூடாது. ஒருமைப்பாட்டைப் பராமரிப்பதற்காக நாம், பிறரின் செயல்கள் தேவனுடன் நமக்குள்ள உறவைப் பாதிக்காதிருக்கும்போது, இசைவினிமித்தம் நமது உரிமைகளை விட்டுக்கொடுத்தலென்பது அவசியமாயிருக்கலாம்.

## முடிவுரை

*இயேசுவின் வசனங்களை நாம் தொடர்ந்து படித்தால், நாம் சத்தியத்தை கற்றுக்கொள்ளக்கூடும் (யோவான் 8:31, 32). மத விஷயங்கள் எல்லாவற்றிலும் இதுவே அணுகுமுறையாயிருக்க வேண்டும்.*

*தேவனுடைய வசனங்களைத் திறந்த மனதுடன் படித்தல் என்பது, ஆண்களுக்கும் பெண்களுக்கும் அவர் கொண்டுள்ள சித்தத்தைக் கற்றுக்கொள்வதற்கான சரியான அணுகுமுறையை நாடுதலாயுள்ளது. பெண்களைப் பற்றிய தேவனுடைய பாரம்பரியத்தையும் அவரது கட்டளைகளையும் புரிந்துகொள்வதற்கு நாம் உண்மையான முயற்சியை மேற்கொள்வோமாக. மனிதருடைய கட்டளைகள் மற்றும் போதனைகளில் அல்ல, தேவனுடைய வசனத்திலேயே சத்தியம் அடங்கியுள்ளது (தீத்து 1:14; கொலோசெயர் 2:22ஐக் காணவும்).*

---

குறிப்புகள்

[1]*The American Heritage Dictionary*, 3d ed., s.v. "custom." [2]Ibid., s.v. "tradition." [3]Everett and Nancy Ferguson, "NT Teaching on the Role of Women in the Assembly," *Gospel Advocate* (October 1990): 30. [4]*1 கொரிந்தியர் 11 மற்றும் பெண்களின் முக்காடு, ஆகியவற்றைப் பற்றி இப்புத்தகத்தில் உள்ள துணைப்பாடத்தில் காணவும்.* [5]Richard E. Oster, Jr., "Culture or Binding Principle - A Study of Head Coverings, Hairstyles, Etc. (1 Corinthians 11:16)," *Harding University 67th Annual Lectureship* (1990): 428.